பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

30 09 2026      WEDNESDAY   6 45    AM

<u>வணக்கம் - மாநில செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

- ஐ.நா சபை கூட்டத்தில் இந்தியா சிறப்பான ஒத்துழைப்பு வழங்கியதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கரிடம் திரு. ஆண்டனியோ குட்ரஸ் பாராட்டு தெரிவித்துள்ளார்.
- தமிழகத்தில் 13 ஐபிஎஸ் அதிகாரிகள் பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.
- தவெக ஆட்சி பொறுப்பேற்றதிலிருந்து, மின்வெட்டு பிரச்சனை அதிகரித்திருப்பதாக பிஜேபி மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் குறை கூறியுள்ளார்.
- ஈரோடு உள்ளிட்ட 16 மாவட்டங்களிலும், மேற்குதொடர்ச்சி மலை மாவட்டங்களிலும் இன்று மிதமான மழை பெய்யக்கூடும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
- இந்தியா – வெஸ்ட் இண்டீஸ் அணிகளுக்கிடையே இரண்டாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி இன்று குவஹாத்தியில் நடைபெறுகிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

------------

ஐ.நா சபை கூட்டத்தில் இந்தியா சிறப்பான ஒத்துழைப்பு வழங்கியதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கரிடம் திரு. ஆண்டனியோ குட்ரஸ் பாராட்டு தெரிவித்துள்ளார்.

நியூயார்க்கில் நேற்று டாக்டர் ஜெய்சங்கர், ஐ.நா. பொதுச்செயலாளர் திரு. ஆண்டனியோ குட்ரஸை சந்தித்து பேசினார்.

அப்போது அவர் இந்தியாவின் ஒத்துழைப்புக்கு பாராட்டு தெரிவித்ததாக ஆண்டனியோ குட்ரஸின் செய்தி தொடர்பாளர் ஸ்டீபன் துஜாரிக் தெரிவித்துள்ளார்.

திரு ஆண்டனியோ குட்ரசுடன் மத்திய கிழக்கு பகுதியில் நிலவும் சூழல், யுக்ரைன் போர் உள்ளிட்ட விவகாரங்கள் குறித்து டாக்டர் ஜெய்சங்கர் ஆலோசித்ததாக அவர் மேலும் கூறினார்.

-----------

பரமக்குடி அரசு மருத்துவமனை புறக்காவல் நிலையத்தில், பணியில் ஈடுபட்டிருந்த போது உயிரிழந்த பெண் தலைமை காவலர் கண்ணகியின் குடும்பத்திற்கு 30 லட்சம் ரூபாய் நிதியுதவி வழங்க முதலமைச்சர் திரு. விஜய் உத்தரவிட்டுள்ளார்.

ராமநாதபுரம் மாவட்டம் பார்த்திபனூர் காவல் நிலையத்தில் பணியாற்றிய கண்ணகி, இருதரப்பினரிடையே ஏற்பட்ட மோதலின் போது, அவர்கள் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில், தப்பி ஓடிய நபரை பிடிக்க சென்ற போது, எதிர்பாராத விதமாக மயங்கி விழுந்து பின்னர் உயிரிழந்தார்.

இதையடுத்து, கண்ணகியின் குடும்பத்திற்கு இரங்கல் தெரிவித்துள்ள முதலமைச்சர், 30 லட்சம் ரூபாய் நிவாரண நிதி வழங்க உத்தரவிட்டுள்ளதாக தமிழக அரசின் செய்தி குறிப்பு தெரிவிக்கிறது.

-----------

தமிழகத்தில் 13 ஐபிஎஸ் அதிகாரிகள் பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

சேலம் மாநகர காவல்துறை ஆணையராக இருந்த ஜோஷி நிர்மல்குமார் காவல்துறை நவீன மயமாக்கல் பிரிவு தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

சேலம் ஆணையர் பதவிக்கு ஏ.ஜி.பாபு நியமிக்கப்பட்டுள்ளார்.

சென்னை பெருநகர் காவல்துறை நுண்ணறிவு பிரிவு இணை ஆணையராக சந்தோஷ் ஹதிமானி நியமிக்கப்பட்டுள்ளார்.

சேலம் சரக டிஐஜி-யாக தேவராணியும், சென்னை அடையாறு துணை ஆணையராக பத்ரி நாராயணனும் நியமிக்கப்பட்டிருப்பதாக தமிழக அரசின் உள்துறை கூடுதல் தலைமை செயலாளர் மணிவாசன் உத்தரவில் தெரிவித்துள்ளார்.

-----------

தமிழகத்தில் தவெக ஆட்சி பொறுப்பேற்றதிலிருந்து, மின்வெட்டு பிரச்சனை அதிகரித்திருப்பதாக பிஜேபி மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் குறை கூறியுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், வரலாறு காணாத மின் தட்டுப்பாட்டை மாநிலம் எதிர்கொண்டிருப்பதாகவும், இரவு நேரங்களில் மின்வெட்டு ஏற்படுவதால் பல இடங்களில் பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபடுவதாகவும் தெரிவித்துள்ளார்.

அரசு மருத்துவமனைகளில் மின்வெட்டு ஏற்படுவதால், செல்போன் வெளிச்சத்தில் சிகிச்சை அளிக்கப்படும் நிலை உள்ளதாக தெரிவித்துள்ள திரு. நயினார் நாகேந்திரன், மின்வாரியத்தில் காலி பணியிடங்களை நிரப்பி, தற்சார்பு மின் உற்பத்தியை பெருக்குவதற்கான நடவடிக்கையில் அரசு கவனம் செலுத்த வேண்டும் என கேட்டுக்கொண்டுள்ளார்.

-----------

மரபுசாரா எரிசக்திக்கு மத்திய அரசு அளித்துவரும் முக்கயத்துவத்தின் ஒரு பகுதியாக, தூத்துக்குடி வ.உ.சிதம்பரனார் துறைமுகம், காற்றாலை இறகுகளை கையாளுவதில் 75 சதவீத வளர்ச்சியை அடைந்துள்ளது.

இந்த ஆண்டு இதுவரை இந்தத் துறைமுகத்தில் 2 ஆயிரத்து 188 காற்றாலை இறகுகள் கையாளப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

-----------

கேரள மாநிலத்திலிருந்து பிளாஸ்டிக் கழிவுகளை ஏற்றிக்கொண்டு மதுரை நோக்கி வந்த லாரியை, போடிமெட்டு சாலையில் பொதுமக்கள் தடுத்து நிறுத்தி அதிகாரிகளிடம் புகார் அளித்தனர்.

இதையடுத்து அந்த லாரி திருப்பி அனுப்பப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட்)

-----------

ஈரோடு உள்ளிட்ட 16 மாவட்டங்களிலும், மேற்குதொடர்ச்சி மலை மாவட்டங்களிலும் இன்று மிதமான மழை பெய்யக்கூடும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தெற்கு ஆந்திரா முதல் தெலங்கானா வரையிலான வங்கக்கடல் பகுதியில் நிலவும் குறைந்த காற்றழுத்த தாழ்வுபாதை காரணமாக ஈரோடு, திண்டுக்கல், மதுரை, நாமக்கல், கள்ளக்குறிச்சி, திருச்சி, அரியலூர், விழுப்புரம் உள்ளிட்ட மாவட்டங்களிலும், மிதமானது முதல் கனமழை வரை பெய்யக்கூடும் என்று வானிலை மைய அறிக்கை தெரிவிக்கிறது.

சென்னையை பொறுத்தவரை வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும்.

மாலை அல்லது இரவு நேரங்களில் ஒருசில இடங்களில் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக அந்த மையம் கூறியுள்ளது.

-----------

மொராக்கோ நாட்டின் முதல் பெண் பிரதமராக Fatima Zahra Mansouri-ஐ அந்நாட்டு மன்னார் மொகமது நியமித்துள்ளார்.

-----------

அணு ஆயுதங்களை ஏந்தி செல்லும் திறன் கொண்ட ரஷ்யாவின் விமானம் ஒன்று, பயிற்சி பணியின் போது, நேற்று விபத்துக்குள்ளானதில் அதில் இருந்த ஊழியர்கள் 6 பேர் உயிரிழந்தனர்.

-----------

புற்றுநோய்க்கான மருந்துகளுக்கு தனியார் மருத்துவமனைகள் அதிக விலையை நிர்ணயிப்பது குறித்து, உச்சநீதிமன்றம் கவலை தெரிவித்துள்ளது.

-----------

இளம் வாக்காளர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தும் நோக்கில் தில்லியில் கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் தேர்தல் ஆணையத்தின் சார்பில் சிறப்பு பதிவு முகாம் இரண்டாவது நாளாக இன்றும் நடைபெறுகிறது.

-----------

ஜம்மு-கஷ்மீரின் கத்வா மாவட்டத்தில் மத்திய தொழிலக பாதுகாப்பு படையின் வீரர்களை சகவீரர் துப்பாக்கியால் சுட்டதில் 4 பேர் உயிரிழந்தனர்.

-----------

ஜம்மு-கஷ்மீரின் பத்காம் மாவட்டத்தில் நேற்று பாதுகாப்பு படையினர் நடத்திய துப்பாக்கி சூட்டில் லஷ்கர்-இ-தொய்பா தீவிரவாதி ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

-----------

தாராபுரம் சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தலையொட்டி, முதலமைச்சர் திரு. விஜய் இன்று அங்கு பிரசாரம் மேற்கொள்ள இருப்பதையொட்டி, அந்த நகரில் போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

-----------

வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு, தஞ்சாவூர் மாவட்டத்தில் மேற்கொள்ள வேண்டிய முன்னேற்பாடு பணிகள் குறித்து, மாநகராட்சி மேயர் திருமதி, அஞ்சுகம் பூபதி அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்டார்.

-----------

குழந்தை திருமணங்களால் பெண்களின் உடல்நலம் மற்றும் உயர்கல்வி பாதிக்கப்படுவது குறித்து பெற்றோருக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த வேணடும் என்று திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் திருமதி வந்தனா கார்க் அறிவுறுத்தியுள்ளார்.

-----------

காஞ்சிபுரத்தில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை சார்பில் மாவட்ட வருவாய் நிர்வாக ஆய்வு கூட்டம் ஆட்சியர் திருமதி.சினேகா முன்னிலையில் நேற்று நடைபெற்றது.

-----------

இந்தியா – வெஸ்ட் இண்டீஸ் அணிகளுக்கிடையே இரண்டாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி இன்று நடைபெற உள்ளது.

குவஹாத்தியில் பிற்பகல் 2 மணிக்கு இப்போட்டி தொடங்குகிறது.

மூன்று ஒருநாள் மற்றும் ஐந்து டுவெண்டி டுவெண்டி போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்பதற்காக வெஸ்ட் இண்டிஸ் அணி இந்தியா வந்துள்ளது.

கடந்த 27-ம் தேதி நடைபெற்ற முதலாவது ஒருநாள் போட்டியில் இந்தியா 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடரில் முன்னிலை பெற்றுள்ளது.

மூன்றாவது மற்றும் கடைசி ஒருநாள் கிரிக்கெட் போட்டி வரும் 3-ம் தேதி சண்டிகரில் நடைபெற உள்ளது.

----------

ஆசிய விளையாட்டுப் போட்டிகளில், 4 X 100 மீட்டர் கலப்பு தொடர் ஓட்டத்தில் வெண்கலப் பதக்கம் வென்றவர்களுக்கும், மகளிர் 4 X 100 மீட்டர் தொடர் ஓட்டத்தில் தங்கப் பதக்கம் வென்றவர்களுக்கும் குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குயடிரசு துணைத் தலைவர் திரு. சி.பி ராதாகிருஷ்ணன், பிரதமர் திரு நரேந்திர மோடி, மத்திய இணையமைச்சர்

30 09 2026 6 45 விளையாட்டுச் செய்திகள்--2

டாக்டர் எல். முருகன் ஆகியோர் வாழ்த்துக்களை தெரிவித்து கொண்டுள்ளனர்.

------------

இந்நிலையில், 4 X 100 மீட்டர் தொடர் ஓட்டத்தில் வெண்கலப் பதக்கம் வென்ற இந்திய அணிக்கும், அதில் இடம்பெற்றுள்ள தமிழ்நாட்டை சேர்ந்த வீராங்கனை அபிநயா ராஜராஜனுக்கும் முதலமைச்சர் திரு. விஜய் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அபிநயாவின் சாதனையை பாராட்டும் வகையில், தமிழக அரசின் சார்பில் அவருக்கு 30 லட்சம் உயரிய ஊக்கத்தொகை வழங்கப்படும் என்றும் முதலமைச்சர் அறிவித்துள்ளார்.

>>>>>>>><<<<<<<